<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு</u>

<u>வாக்குமூல படிவம்</u>

**<u>OS.No.88/2024</u>**

பெயர் : திரு. சேகர் வா.சா : 1
த/பெயர் : காளியண்ணன் தேதி : 19.11.2025

வா.சாட்சி 1 – ன் வாக்குமூலம் 1875ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திரு. கோ. ஜெகதீசன், இரண்டாம் நிலை இருக்கை எழுத்தர் என்பவரால் ஆணையிட்டுபிரமாணம் வாங்கப்பட்டது.

**<u>பிரதிவாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை:–</u>**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால், பிகாம் பாதியிலேயே நிறுத்தி விட்டேன். நான் இவ்வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால், ஒப்பந்தம் போட்டோம், ஆனால் கிரயம் எழுதிக் கொடுக்காததால் கிரைய பத்திரம் எழுதிக் கொடுப்பதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். கிரையை ஒப்பந்த பத்திரத்தை நானும், என் மனைவியான ராணியும் சேர்ந்து தான் போட்டுள்ளோம் என்றால், சரிதான். மேற்படி கிரைய ஒப்பந்த பத்திரமானது பதிவு செய்யப்படாத கிரைய ஒப்பந்த பத்திரம் என்றால், சரிதான். இவ்வழக்கின் 13வது பிரதிவாதி ராணி என்னுடைய மனைவி என்றால், சரிதான். நானும், என்னுடைய மனைவியும் ஒரே குடும்பமாக வாழ்ந்து வருகிறோம் என்றால் சரிதான். நான் என்னுடைய கிராமத்தில் பஞ்சாயத்து தலைவராக இருந்தேன் என்றால், சரிதான், 2011 முதல் 2016 ஆம் ஆண்டு வரை கிராம தலைவராக இருந்தேன். இவ்வழக்கில் உள்ள 1 முதல் 12 வரையிலான பிரதிவாதிகள் என்னுடைய மனைவிக்கு பொது அதிகாரம் பத்திரம் எழுதிக் கொடுத்தவர்கள் என்றால், சரிதான்.

2. தாவா சொத்தானது 1 முதல் 12 பிரதிவாதிகளுக்குரிய பூர்வீக சொத்து என்றால், சரிதான். என்னுடைய மனைவி ஐந்தாம் வகுப்பு வரை படித்துள்ளார். என்னுடைய மனைவிக்கு உலக அறிவு போதுமானதாக இல்லை என்பதால், நான் கூறுபவற்றை அவர் அப்படியே செய்யக் கூடியவர் என்றால், சரியல்ல. என்னுடைய மனைவிக்கு பொது அதிகார பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட்ட தேதியான 13.09.2007ம் தேதியன்று 1 முதல் 12 பிரதிவாதிகள் அவர்களுக்குள்ளாக ஒரு கிரைய பத்திரமும் ஏற்படுத்தியுள்ளார்கள் என்றால், சரிதான். மேற்படி கிரைய பத்திரத்தில் நான் ஒரு சாட்சியாக சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். **<u>(மேற்படி கிரய பத்திரத்தின் 14வது பக்கத்திலுள்ள முதல் சாட்சி கையொப்பம் மட்டும் பி.வா.சா.ஆ1ஆக குறியீடு செய்யப்படுகிறது).</u>**

3. மேற்படி கிரைய பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தானது எந்த கிராமத்தில் உள்ளது, என்றால் மோளிபள்ளி கிராமத்தில் உள்ளது, ராயர் பாளையத்திலிருந்து சித்தாளந்தூர் செல்லும் பிரதான சாலைக்கு தென்புறத்தில் மேற்படி சொத்து அமைந்துள்ளது. மேற்படி சொத்தின் மொத்த விஸ்தீரணம் என்னவென்றால், 1 ஏக்கர் 60 செண்ட் ஆகும். அவை அனைத்தும் வீட்டுமனைகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான், மொத்தம் 27 வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டுள்ளது. நான் சாட்சி கையொப்பம் செய்துள்ள பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட சொத்தின் விலை என்னவென்றால், அது எனக்கு தெரியாது, அது அவர்களுக்குள்ளாக பத்திரம் எழுதி உள்ளார்கள். நான் சாட்சி கையொப்பம் செய்துள்ள சொத்தானது ரூ. 42000/- த்திற்கு கிரையம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவ்வாறுதான் போடப்பட்டுள்ளது.

4. மேற்படி 27 ஆவது இலக்கமிட்ட பிளாட்டின் சதுர அடி 2082 என்றால், அது எனக்கு தெரியாது. என்னுடைய மனைவிக்கு எழுதி கொடுத்த பொது அதிகார பத்திரத்தில் 20 வீட்டு மனைகளுக்கு பொது அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணமானது என்னுடைய மனைவிக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட பொது அதிகார பத்திரம் என்றால், சரிதான். மேற்படி பொது அதிகார பத்திரத்தில் மேற்படி பிளாட்டுகளுக்குரிய வரைபடமும் இணைக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். **(மேற்படி பொதுஅதிகார பத்திரம் பி.வா.சா.ஆ2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** மேற்படி வரைபடத்திலும் வீட்டுமனைகளுக்கான அளவுகள் மற்றும் நான்கு பக்க எல்லைகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். எனவே மேற்படி பிளாட்டுகளை மீண்டும் அளக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால், சரியல்ல, கற்கள் ஊன்றப்பட்டுள்ளது, ஆனால் அதன் அளவுகள் எவ்வாறு தெரியும்.

5. என்னுடைய பிராது மற்றும் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் என்னுடைய மனைவி மொத்த பிளாட்டுகளுக்கும் விலை பேசி முழு கிரைய தொகையையும் செலுத்தி ரசீது பெற்றுள்ளார் என்றால், சரிதான். அது குறித்து எனக்கு நேரடியாக தெரியும் என்றால், சரிதான். என்னுடைய மனைவி 15.09.2011ம் தேதியன்று மேற்படி தொகையை கொடுத்தார். மேற்படி இரசீதை தாக்கல் செய்ய இயலுமா என்றால், ரசீதின் நகலை தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கில் இரசீதை நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். சாட்சி அவர் தரப்பில்

தாக்கல் செய்யப்பட்ட அனைத்து ஆவணங்களையும் பார்வையிட்ட பின்னர் ரசீது அதில் இல்லை என்றும் தேவைப்பட்டால் தாக்கல் செய்ய தயாராக இருப்பதாகவும் கூறுகிறார். மேற்படி இரசீதின் நகல்தான் என் வசம் உள்ளது, அதை நான் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன், அசல் என்வசம் இல்லை. பணம் கொடுத்த பொழுது அந்த ரசீது நகலை நான் எடுத்து வைத்துள்ளேன். என்னுடைய மனைவிக்கு நான் பணம் கொடுத்ததால் ரசீது நகலை எடுத்து வைத்துள்ளேன் என்றால், சரியல்ல, என் மனைவி தான் பணம் கொடுத்தார்.

6. மேற்கண்டவாறு ஒரு ரசீதே இல்லை என்றாலும், வழக்கிற்காக ரசீது இருப்பதாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால், சரியல்ல. மேற்படி பொது அதிகாரங்கள் பத்திரத்தை பயன்படுத்தி என்னுடைய மனைவி கடந்த 15.09.2011ம் தேதியன்று அசோக்குமார் என்பவரிடம் ஒரு கிரைய ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்தி உள்ளார் என்றால்இ அது எனக்கு தெரியாது. (சாட்சி மீண்டும் தெரியாது என்று கூற இயலாது என்றும் ஞாபகம் இல்லை என்றும் கூறுகிறார்.) மேற்படி ஆவணத்தில் நான் ஒன்றாவது சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். **(மேற்படி சாட்சி கையொப்பம் பி.வா.சா.ஆ3ஆக குறியீடு செய்யப்படுகிறது).** மேற்படி சொத்துக்கள் விபரமாக அனைத்து வேலைகளையும் நான் தான் முன்னின்று செய்துள்ளேன் என்றாலும், என் மனைவி கையொப்பம் மட்டும் தான் செய்தார் என்றால், சரியல்ல. அனைத்து விபரங்களும் எனக்கு தெரியும் என்றாலும், அதை ஒப்புக்கொண்டால் இவ்வழக்கிற்கு பாதகமாகிவிடும் என்பதால் தான் மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

ஒம்/– G. ரூபனா,
கூடுதல் சார்பு நீதிபதி,
திருச்செங்கோடு.